## குறுவை நெல் கொள்முதல் எப்போது?

கே. சுரேஷ்

First Published : 30 Aug 2010 02:33:01 AM IST



ஆலங்குடி: புதுக்கோட்டை மாவட்டத்தில் குறுவை சாகுபடி நெல் கொள்முதலுக்காக நுகர்பொருள் வாணிபக் கழகக் கொள்முதல் நிலையங்கள் எப்போது திறக்கப்படும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர் விவசாயிகள்.

விவசாயிகளுக்கு நெல்லுக்கு உரிய விலை கிடைக்க காரணமாக இருப்பவை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கொள்முதல் நிலையங்கள்தான். புதுக்கோட்டை மாவட்டத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில், சம்பா சாகுபடி நெல் கொள்முதல் 60 இடங்களிலும் குறுவை சாகுபடி நெல் கொள்முதல் 10 இடங்களிலும் நடைபெறும்.

இதில் குறுவை சாகுபடிக்கான நெல் கொள்முதல் அன்னவாசல், நெடுவாசல், வல்லத்திராகோட்டை, மழையூர், பாப்பாபட்டி, ரெகுநாதபுரம், திருவப்பாடி, சுப்பிரமணியபுரம், வைரிவயல், கலியராயன்விடுதி ஆகிய இடங்களில் ஆகஸ்ட் முதல் வாரத்தில் தொடங்குவது வழக்கமாகும்.

ஆனால், நிகழாண்டில் இதுவரை இந்த மாவட்டத்தில் எந்த இடத்திலும் நெல் கொள்முதல் நடைபெறவில்லை. அதே சமயம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் வழக்கம்போல உரிய இடங்களில் நெல் கொள்முதல் நடைபெறுகிறநது.

இது புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளிடத்தில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நிகழாண்டு குறுவை சாகுபடி நெல் கொள்முதல் உண்டா, இல்லையா என்ற கேள்வி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் எஸ்.பி. முத்துக்குமரன் கூறியது:

""எத்தனையோ பிரச்னைகளுக்கு மத்தியிலும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நிகழாண்டில் ஏறத்தாழ 4 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி மேற்கொண்டுள்ளனர். ஆனால், நுகர்பொருள் வாணிபக் கழகம் இன்னமும் கொள்முதலைத் தொடங்கவில்லை.
இதனால், வெளிச்சந்தையில் கட்டுப்படியாகாத விலைக்கு நெல்லை வியாபாரிகளிடம் விற்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். நுகர்பொருள் வாணிபக் கழகம் வழக்கம்போல நெல் கொள்முதலைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார் அவர்.

**செண்டுமல்லி பூ விலை குறைவு: விவசாயிகள் கவலை**

First Published : 29 Aug 2010 09:01:47 AM IST

தருமபுரி, ஆக. 28: தருமபுரி மாவட்டத்தில் செண்டுமல்லிப் பூ வரத்து அதிகமானதால், கடந்த 3 நாள்களாக பூவின் விலை குறைந்தது. இதனால், பூ உற்பத்தி செலவு கூட
கிடைக்கவில்லையென விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.
மாவட்டத்தில் 1,200 ஏக்கரில் செண்டு மல்லிப்பூ உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பாலக்கோடு, மொரப்பூர் பகுதிகளில் 55 சதவிகிதத்திற்கு மேல் விவசாயிகள் செண்டுமல்லிப் பூ உற்பத்தி செய்துள்ளனர். போதிய மழை இருந்ததால், பூ விளைச்சல் அதிகமாக இருந்தது.
தருமபுரி மாவட்டத்திலிருந்து ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் செண்டு மல்லிப்பூ விற்பனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இப்போது, கோவை, உடுமலைப்பேட்டை, பல்லடம் ஆகிய பகுதிகளிலிருந்து அதிக அளவு செண்டு மல்லிப்பூ சேலம், ஈரோடு பகுதிகளுக்கு வரத் தொடங்கியுள்ளது.
இதனால், மாவட்டத்தில் உற்பத்தியாகும் பூ முழுவதும், மாவட்டத்திலுள்ள சந்தைகளுக்கே அனுப்பிவைக்கப்படுகிறது. இதனால், பூ விலை கிலோ ரூ.20க்கு குறைந்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ செண்டுமல்லிப் பூ ரூ.60-க்கு விற்கப்பட்டது.
பூ விற்பனை விலை குறையத் தொடங்கியுள்ளதால், உற்பத்தி செலவை ஈடுகட்ட முடியவில்லை என நல்லம்பள்ளியை சேர்ந்த விவசாயி ராமன் தெரிவித்தார்.

**உற்பத்திச் செலவு கூட கிடைக்கவில்லை: விவசாயிகள் கவலை**

First Published : 29 Aug 2010 09:52:16 AM IST

தருமபுரி, ஆக. 28: தருமபுரி மாவட்டத்தில் செண்டுமல்லிப் பூ வரத்து அதிகமானதால், அதன் விலை கடந்த 3 நாள்களாகக் குறைந்தது. இதனால், பூ உற்பத்திச் செலவு கூட கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் 1,200 ஏக்கரில் செண்டுமல்லிப் பூ உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

பாலக்கோடு, மொரப்பூர் பகுதிகளில் 55 சதவீதத்துக்கு மேல் விவசாயிகள் செண்டுமல்லிப் பூ உற்பத்தி செய்துள்ளனர். போதிய மழை இருந்ததால், பூ விளைச்சல் அதிகமாக இருந்தது.

தருமபுரி மாவட்டத்திலிருந்து ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் செண்டு மல்லிப் பூ விற்பனைக்கு எடுத்துசெல்லப்பட்டது. தற்போது, கோவை, உடுமலைப்பேட்டை, பல்லடம் ஆகிய பகுதிகளிலிருந்து அதிக அளவு செண்டு மல்லிப்பூ சேலம், ஈரோடு பகுதிகளுக்கு வரத் தொடங்கியுள்ளது.

இதனால், மாவட்டத்தில் உற்பத்தியாகும் பூ முழுவதும், மாவட்டத்திலுள்ள சந்தைகளுக்கே அனுப்பிவைக்கப்படுகிறது.

இதனால், பூ விலை கிலோ ரூ.20க்கு குறைந்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ செண்டுமல்லிப் பூ ரூ.60-க்கு விற்கப்பட்டது.

பூ விற்பனை விலை குறையத் தொடங்கியுள்ளதால், உற்பத்தி செலவை ஈடுகட்ட முடியவில்லை என நல்லம்பள்ளியை சேர்ந்த விவசாயி ராமன் கூறினார்.

**திராட்சையை கிலோ கணக்கில் கொள்முதல் செய்ய வியாபாரிகள் தயார்**

First Published : 29 Aug 2010 11:54:45 AM IST

கம்பம்,ஆக. 28: தேனி மாவட்டத்தில் விளைவிக்கப்படும் திராட்சைகளை கிலோ கணக்கில் கொள்முதல் செய்ய வியாபாரிகள் தயாராக இருப்பதாக, வருவாய்க் கோட்டாட்சியர் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இம் மாவட்டத்தில் கம்பம், சுருளிப்பட்டி, கூடலூர், குள்ளப்பகவுண்டன்பட்டி, காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் கருப்புத் திராட்சை ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டு வருகிறது.

இந்த வகை திராட்சை ஆண்டு முழுவதும் மூன்று முறை அறுவடை செய்யப்படுகிறது.

இதேபோல, ஓடைப்பட்டி, வெள்ளையம்மாள்புரம், தென்பழனி உள்ளிட்ட பகுதிகளில் ஆஸ்திரேலியன் விதையில்லா பச்சை திராட்சையும் பயிரிட்டு வருகின்றனர்.

இந்த வகையான திராட்சை ஆண்டுக்கு இரண்டு முறை அறுவடை செய்யப்படுகிறது.

மாவட்டத்தில் விளையும் திராட்சைகளை விவசாயிகளிடம் இருந்து, வியாபாரிகள் 12 கிலோக்கள் அடங்கிய திராட்சையை மணு என்ற அளவில் வாங்கி வந்தனர்.

கடந்த சில நாள்களாக விவசாயிகள் திராட்சைப் பழத்தை கிலோ கணக்கில் பெற்று கொள்ள வலியுறுத்தி, மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, திராட்சைகளை கிலோ கணக்கில் வாங்க ஆட்சியர் உத்தரவிட்டார்.

இந்நிலையில், விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் பிரச்னை ஏற்பட்டு வந்தது.

வெள்ளிக்கிழமை, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் மோகனதாஸ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராமகிருஷ்ணன், உத்தமபாளையம் வட்டாட்சியர் மனோகரன், திராட்சை விவசாய சங்கத் தலைவர் செல்வக்குமார், செயலாளர் நந்தகுமார், வியாபாரிகள் சங்கத் தலைவர் தெய்வேந்திரன், செயலாளர் தங்கம் ஆகியோரும் கூட்டத்தில் பங்கேற்றனர்.

கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்:

இனிவரும் காலங்களில் திராட்சை கிலோ கணக்கில் மட்டுமே கணக்கிடப்படும். மணு கணக்கு முழுவதும் ஒழிக்கப்பட்டது.

திராட்சைப் பழங்களை வெட்டி சுத்தப்படுத்தி, தரம்பிரிக்கும் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை வியாபாரிகளுக்கு கிலோவுக்கு 40 பைசா வீதம் விவசாயிகள் கொடுப்பது என்றும், வியாபாரிகள் திராட்சையைக் கொள்முதல் செய்த அன்றே அதற்கான விலை, மொத்தம் எத்தனை கிலோ உள்ளிட்டவைகள் அடங்கிய விலைப் பட்டியலை, விவசாயிகளுக்கு கண்டிப்பாக வழங்க வேண்டும் என்று இரு தரப்பினரும் வருவாய் கோட்டாட்சியர், அதிகாரிகள் முன்னிலையில் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

கூட்டத்தில் காவல்துறையினர், தோட்டக்கலைத் துறையினரும் கலந்துகொண்டனர்.

**எள் விளைச்சல் அதிகரிப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 29 Aug 2010 11:54:20 AM IST

கம்பம், ஆக. 28: தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி மானாவாரி நிலங்களில் எள் விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மானாவாரி நிலங்களில் விவசாயிகள் எள் சாகுபடி செய்துள்ளனர்.

தற்போது எள் முழுமையாக விளைச்சலாகி அறுவடைப் பணி நடைபெறுவதால், எள் செடிகளை வெட்டி களத்துமேட்டில் உலர்த்தும் பணியிலும், எள்ளைத் தரம் பிரிக்கும் பணியிலும் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது, எள் மகசூல் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதனால் தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருச்சி, மதுரை உள்பட பல்வேறு மாவட்டங்களிலிருந்து எள் வாங்குவதற்காக வியாபாரிகள் குவிந்து வருகின்றனர்.

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் விளைந்துள்ள எள் தற்போது 100 கிலோ எடை கொண்ட மூட்டை | 4 ஆயிரம் முதல் | 4,300 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்தாண்டு, எள்

விளைச்சல் அதிகரித்துள்ள நிலையிலும், கடந்த ஆண்டைவிட மூட்டைக்கு ரூ. 500 வரை விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**காய்கறிகளை வெளியே வாங்கி உழவர் சந்தையில் விற்பதை தவிர்க்க வெள்ளை அட்டை**

First Published : 29 Aug 2010 11:57:21 AM IST

பழனி, ஆக. 28: காய்கறிகளை வெளியே வாங்கி பழனி உழவர் சந்தையில் விற்பதைத் தவிர்க்க வெள்ளை அட்டை வழங்கப்படுகிறது.

பழனி சண்முகபுரத்தில் உழவர் சந்தை உள்ளது. இங்கு காய்கறிகள் புத்தம் புதிதாகக் கிடைப்பதோடு விலையும் குறைவாக உள்ளதால் காலையில் மக்கள் கூட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உழவர் அடையாள அட்டை உள்ளவர்கள் இங்கு காய்கறிகள் விற்க அனுமதிக்கப்படுகின்றனர்.

இந் நிலையில், வெளியே காய்களை மொத்த விலைக்கு வாங்கி உழவர் சந்தையில் லாபம் வைத்து வியாபாரிகள் விற்பதாகப் பல விவசாயிகள் குறை கூறியுள்ளனர். மேலும் சில தினங்களுக்கு முன் ஆயக்குடி டிகேன்புதூர் உள்பட சில பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் காய்கறிகளை உழவர் சந்தைக்கு வெளியே விற்றுள்ளனர்.

இதுகுறித்து உழவர் சந்தை மேலாளர் சுருளிவேலிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

பழனி உழவர் சந்தையில் பல விவசாயிகள் இடம் இன்றி தரையில் வைத்து காய்கறிகளை விற்கின்றனர். புதிய கடைகள் கட்டக் கோரிக்கை வைத்துள்ளோம்.

இங்கு வரும் விவசாயிகளுக்கு குலுக்கல் முறையில் இடம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் பொருள்களை விற்கக் கொண்டு வரும்போது குலுக்கல் முறையில் வரும் கடைகளே வழங்கப்படுகிறது.

இதனால் மக்கள் பரவலாகச் சென்று காய்கறிகளை வாங்குகின்றனர். பதிந்துள்ள விளைவிக்கும் பயிர்கள் அல்லாமல் புதிதாக வேறு காய்கறிகள் கொண்டு வருவோரிடம் தற்போது புதிதாக விளைவிக்கும் பயிர் இவர்கள் நிலத்தில் பயிர் செய்ததுதான் என்பதற்கான விவரம் அறிய வேளாண் அலுவலரிடம் சான்று பெற வெள்ளை அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து முன்னரே அவர்களுக்குத் தெரிவித்தும் அட்டை கொண்டு வராத நிலையில் அவர்களுக்கு உள்ளே இடம் மறுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

தற்போது வெங்காயம், இஞ்சி யாரும் பயிர் செய்யாத நிலையில் இவற்றை மட்டும் வெளியே வாங்கி உழவர் சந்தையில் விற்க சிலருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதுவும் வெளிமார்க்கெட்டை விட 3 முதல் 4 ரூபாய் குறைவாக விற்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது என சுருளியப்பன் தெரிவித்தார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 86.17 அடி

First Published : 29 Aug 2010 11:13:30 AM IST

சேலம், ஆக. 28: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 86.17 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 14,643 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 8,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 48.38 டி.எம்.சி.

## குறுவை நெல் கொள்முதல் எப்போது?

கே. சுரேஷ்

First Published : 29 Aug 2010 12:37:49 PM IST

ஆலங்குடி, ஆக. 28: புதுக்கோட்டை மாவட்டத்தில் குறுவை சாகுபடி நெல் கொள்முதலுக்காக நுகர்பொருள் வாணிபக் கழகக் கொள்முதல் நிலையங்கள் எப்போது திறக்கப்படும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர் விவசாயிகள்.

விவசாயிகளுக்கு நெல்லுக்கு உரிய விலை கிடைக்க காரணமாக இருப்பவை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கொள்முதல் நிலையங்கள்தான். புதுக்கோட்டை மாவட்டத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில், சம்பா சாகுபடி நெல் கொள்முதல் 60 இடங்களிலும் குறுவை சாகுபடி நெல் கொள்முதல் 10 இடங்களிலும் நடைபெறும்.

இதில் குறுவை சாகுபடிக்கான நெல் கொள்முதல் அன்னவாசல், நெடுவாசல், வல்லத்திராகோட்டை, மழையூர், பாப்பாபட்டி, ரெகுநாதபுரம், திருவப்பாடி, சுப்பிரமணியபுரம், வைரிவயல், கலியராயன்விடுதி ஆகிய இடங்களில் ஆகஸ்ட் முதல் வாரத்தில் தொடங்குவது வழக்கமாகும்.

ஆனால், நிகழாண்டில் இதுவரை இந்த மாவட்டத்தில் எந்த இடத்திலும் நெல் கொள்முதல் நடைபெறவில்லை.

அதே சமயம், தஞ்சாவூர், நாகபட்டினம், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் வழக்கம்போல உரிய இடங்களில் நெல் கொள்முதல் நடைபெறுகிறது.

இது புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளிடத்தில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நிகழாண்டு குறுவை சாகுபடி நெல் கொள்முதல் உண்டா, இல்லையா என்ற கேள்வி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் எஸ்.பி. முத்துக்குமரன் கூறியது:

""எத்தனையோ பிரச்னைகளுக்கு மத்தியிலும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நிகழாண்டில் ஏறத்தாழ 4 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி மேற்கொண்டுள்ளனர். ஆனால், நுகர்பொருள் வாணிபக் கழகம் இன்னமும் கொள்முதலைத் தொடங்கவில்லை.

இதனால், வெளிச்சந்தையில் கட்டுப்படியாகாத விலைக்கு நெல்லை வியாபாரிகளிடம் விற்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். நுகர்பொருள் வாணிபக் கழகம் வழக்கம்போல நெல் கொள்முதலைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார் அவர். விவசாயிகளின் எதிர்பார்ப்பும் அதுவே.

தினமலர்

**காலிஃப்ளவர் விலை வீழ்ச்சி: விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,01:06 IST

ஓசூர்: ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் உற்பத்தி அதிகரிப்பால் காலிஃபிளவர் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலவும் குளிர்ந்த நிலையும், நல்ல மண் வளத்தையும் பயன்படுத்தி விவசாயிகள் அதிகளவில் காய்கறி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தி செய்ப்படுகிறது. ஓசூர், சூளகிரி, பாகலூர், தளி மற்றும் தேன்கனிக்கோட்டை பகுதியில் காலிஃப்ளவர் காய்கறி விவசாயிகள் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்து வருகின்றனர்.
கடந்த ஆண்டு காலிஃப்ளவர் சாகுபடியில் நல்ல வருமானம் கிடைத்தால், நடப்பாண்டு விவசாயிகள் அதிகளவு காலிஃப்ளவர் சாகுபடி செய்தனர். இதனால், எப்போதும் இல்லாத வகையில் சாகுபடி பரப்பு அதிகமாகி உற்பத்தியும் இரு மடங்கு அதிகமானது. உற்பத்தி அதிகரிப்பால் காலிஃப்ளவர் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.
கடந்த இரு வாரம் வரை ஒரு காலிஃப்ளவர் பூ 5 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது, ஏற்றுமதி ரக காலிஃப்ளவர் பூ ஒரு ரூபாய் முதல் 3 ரூபாய் வரைக்கும், உள்ளூர் சந்தைகளில் மூன்று மற்றும் இரு காலிஃப்ளவர் பூக்கள் ஒரு ரூபாய்க்கும் விற்பனையாகிறது.
விலை குறைவால் விவசாயிகள், தள்ளுவண்டி வியாபாரிகளிடம் குறிப்பிட்ட விலைக்கு மொத்தமாக விற்பனை செய்கின்றனர். அவர்கள் குடியிருப்பு பகுதியில் திறந்த வெளியில் போட்டு கூவி, கூவி விற்பனை செய்கின்றனர். தளி மற்றும் பாகலூர் பகுதியில் விவசாயிகள்

விளைநிலங்களில் காலிஃப்ளவரை அறுவடை செய்யாமல் போட்டுள்ளனர். இதனால், அவை நிலத்தில் அழுகி நாசமடைந்து வருகின்றன. சூளகிரி, ஓசூர் பகுதியில் "டைமன்ட் பேக்' பூச்சி தாக்குதல் மற்றும் உடனுக்குடன் பூ விரிவடைதல் ஆகியவற்றாலும் காலிஃப்ளவர்களுக்கு மார்க்கெட்டில் வரவேற்பு இல்லாமல் உள்ளது.
இதுகுறித்து ஓசூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் காளியப்பன் கூறியதாவது: பொதுவாக காலிஃப்ளவருக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளில் எப்போதும் நிலையாக விலையும், வரவேற்பும் இருக்கும். நாற்று நட்ட 70 நாளில் காலிஃப்ளவரை அறுவடை செய்யலாம். இதனால், குறுகிய காலத்தில் நிலையான வருமானம் கிடைப்பதால் விவசாயிகள் காலிபிளவர் விரும்பி சாகுபடி செய்கின்றனர். காலிபிளவர் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு ஒரு பூ மூன்று ரூபாய்க்கு விற்றாலும் ஏக்கருக்கு 20 முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது.
தற்போது உற்பத்தி அதிகரிப்பாலும், தவறான சாகுபடி முறையால் பூக்கள் உடனுக்குடன் விரிவடைவதாலும் விலை குறைந்துள்ளது. இந்த விலை குறைவு தற்காலிகமானதுதான். இன்னும் ஓரிரு நாளில் மீண்டும் விலை உயர்ந்து விடும். காலிஃபிளவரை அறுவடை செய்த இரு நாளில் விற்பனை செய்திட வேண்டும். இல்லையென்றால் பூக்கள் விரிவடைந்து விற்பனை செய்ய முடியாது. பூக்கள் விரிவடைந்தால் வெள்ளையாகி வியாபாரிகள் வாங்க மாட்டார்கள். பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரிகள் பரிந்துரைக்கும் தடுப்பு மருந்து அடிக்க வேண்டும். வரவேற்பு உள்ள காலத்தில் ஒரு பூ 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பனையாகும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு புதிய மின் மோட்டார் பொருத்த ரூ.22.60 லட்சம் நிதி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,01:05 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு பழைய மின் மோட்டார்களை மாற்றி புதிய மின்மோட்டார்கள் பொருத்தும் திட்டத்திற்காக 22 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மானிய தொகை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.
கலெக்டர் அருண்ராய் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2010-2011ம் நிதியாண்டில் விவசாயிகளுக்கு பழைய மின் மோட்டார்களை மாற்றி புதிய மின்மோட்டார்களை பொருத்தும் திட்டம் வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்காக தமிழக அரசு கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு 22 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துதல் மற்றும் விவசாய பம்புசெட்டுகளை திறன்படுத்துதல் திட்டத்தின் கீழ் விவசாயத்துக்கு பயன்படுத்தும் திறன் குறைந்த பழைய மின்மோட்டார்களை மாற்றி அங்கீகாரம் பெற்ற புதிய மின்மோட்டார்கள் பொருத்தி கொள்ள அரசு மானியமாக மின்மோட்டார் விலையில் 50 சதவீதம் அல்லது 10 ஆயிரம் ரூபாய், இதில் எது குறைவோ அந்த தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 50 சதவீதம் அல்லது 12,000 ரூபாய் இதில் எது குறைவோ அந்த தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய தாலுகாவை சேர்ந்த விவசாயிகள் சிட்டா, அடங்கல், நிலவரைபடம் மற்றும் மின் அட்டை ஆகியவற்றுடன் "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை,3 வது குறுக்கு தெரு, கோ-ஆப்ரேடிவ் காலனி, கிருஷ்ணகிரி' என்ற முகவரியிலும், ஓசூர், தேன்கனிக்கோட்டை ஆகிய தாலுகாவை சேர்ந்த விவசாயிகள் "உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, ராயக்கோட்டை ரோடு, சென்னசந்திரம், ஓசூர்' என்ற முகவரியில் அணுகி பயன்பெறலாம்.

**நெல் சாகுபடிக்கு கூடுதல் மானியம் விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,01:04 IST

கிருஷ்ணகிரி: ""நெல்சாகுபடி விவசாயிகளுக்கு அரசு நேரடியாக கூடுதல் மானியம் வழங்க வேண்டும், '' என, தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் டாக்டர் சிவசாமி தெரிவித்தார்.
கிருஷ்ணகிரி அடுத்த கும்மனூரில் தமிழக விவசாயிகள் சங்க புதிய கிளை துவக்க விழா நடந்தது. மாநில துணை தலைவர் ராமகவுண்டர் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் லோகாபிராம் முன்னிலை வகித்தார். கிளை தலைவர் மாதையன் வரவேற்றார்.
மாநில தலைவர் டாக்டர் சிவசாமி, கிளை சங்கத்தை துவக்கி வைத்து பேசியதாவது:
விவசாயிகளுக்கு விளைச்சலை பெருக்க ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் நேரடியாக தமிழக அரசு மானியம் வழங்க வேண்டும். செம்மை நெல்லுக்கு தற்போது வழங்கும் மானியத்தை அதிகப்படுத்த வேண்டும். இதேபோல் அனைத்து நடவு நெல்களுக்கும் வழங்கினால் விவசாயிகள் நெல் உற்பத்தியை பெருக்க முடியும். தமிழகத்தில் தென்னையில் அதிக அளவு ஈரியோஃபைட் நோய் தாக்குதல் உள்ளது. நோயை கட்டுப்படுத்த மரத்தில் உள்ள பாளைகளை 6 மாதம் தினமும் சீவி சுத்தம் செய்து வந்தால் நோய் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். பாளையை சீவும் போது கள் இறக்கி பதப்படுத்தி மற்ற நாடுகளில் விற்பனை செய்வது போன்று தமிழகத்திலும் கள்ளை மளிகை கடைகளில் விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும்.

நிலத்தடி நீர் ஆதாரம் பெருக கிணறுகளுக்கு அருகில் மழை நீர் சேமிப்பு திட்டத்தை தமிழகத்தில் மீண்டும் அமுல்படுத்த வேண்டும். மத்திய அரசு தேசிய வங்கிகளில் தள்ளுபடி செய்த கடனால் தமிழகத்தில் 90 சதவீத விவசாயிகள் பயன் பெறவில்லை. தமிழக அரசு கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்தது போல் மத்திய அரசும் அனைத்து தேசியமயமாக்கப்பட்ட மற்றும் கூட்டுறவு வங்கிகளிலும் விவசாயம் மற்றும் அதனை சார்ந்த அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

மாநில பொருளாளர் வெங்கடாசலம், மாவட்ட பொருளாளர் வண்ணப்பா, பொது செயலாளர் சுந்தரசேன், செயலாளர்கள் செந்தில்குமார், கேசவரெட்டி, தாசப்பா மகளிர் அணி செயலாளர் மணிமேகலை ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கிளை செயலாளர் சாமிநாதன் நன்றி கூறினார்.

**ஈரோட்டில் டி.ஏ.பி., யூரியா உரம் திடீர் தட்டுப்பாடு கூட்டுறவு சங்கங்களில் கையிருப்பு இல்லை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,02:47 IST

ஈரோடு: ஈரோடு மாவட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் டி.ஏ.பி., மற்றும் யூரியா உரத்துக்கு திடீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் பாசனம் மூலம் 5,083 ஹெக்டேர், தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசனத்தில் 9,800 ஹெக்டேர், மேட்டூர் வலதுகரை மற்றும் அம்மாபேட்டை பாசனமாக 7,112 ஹெக்டேர், கீழ்பவானி பாசனம் முதல் போகத்தில் 42 ஆயிரத்து 355 ஹெக்டேர், இரண்டாம் போகத்தில் 41 ஆயிரத்து 150 ஹெக்டேர், குண்டேரிப்பள்ளம் அணை மூலம் 1,001 ஹெக்டேர், வரட்டுப்பள்ளம் அணை மூலம் 1,183 ஹெக்டேர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன.

ஜூலை 11ல் காலிங்கராயனிலும், ஆகஸ்ட் 15ல் கீழ்பவானி வாய்க்காலிலும் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. மாவட்டத்தின் அனைத்து பகுதியிலும் தீவிரமாக விவசாயப் பணிகள் நடக்கிறது. சில ஆண்டுகளாக மஞ்சளுக்கு நல்ல விலை கிடைப்பதால், மாவட்ட விவசாயிகள் நடப்பு பாசனத்தில் அதிகளவில் மஞ்சள் சாகுபடி செய்துள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் உள்ள பாசன சபைகள் மூலம் நடப்பாண்டில் 9,349 ஹெக்டேர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க, தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தியது. இதனால், கிராமங்களில் வசிக்கும் பெரும்பாலானோர், வேலை உறுதி திட்டத்தில் சேர்ந்து பணியாற்ற விரும்புகின்றனர். இதனால், விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டு, கூலி கடுமையாக உயர்ந்துள்ளது. இப்பிரச்னை ஒருபக்கம் இருக்க, கூட்டுறவு சங்கங்கள் மூலம் கிடைக்கும் உரத்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத்தலைவர் பெரியசாமி கூறியதாவது:மாவட்டம் முழுவதும் உள்ள கூட்டுறவு வங்கிகள் மூலம் உரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. ஆகஸ்ட் 16ல் ஈரோடு மாவட்ட பாசனத்துக்காக 60 டன் உரங்கள் ரயில் மூலம் ஈரோடு வந்ததாகத் தெரிகிறது. இன்றைய தேதியில் மாவட்டத்தின் எந்த கூட்டுறவு வங்கியிலும் டி.ஏ.பி., மற்றும் யூரியா உரம் ஒரு மூட்டை கூட இல்லை.அனைத்து சாகுபடிக்கும் உரம் இன்றியமையாதது. கூட்டுறவு வங்கியில் உரம் இல்லாத நிலையில், விவசாயிகள் தனியார் வியாபாரிகளிடம் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. மூட்டைக்கு 50 முதல் 100 ரூபாய் வரை அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது.

கீழ்பவானி பாசனப் பகுதியில் தற்போது முதல் போகத்தில் 1.58 லட்சம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. யூரியா, டி.ஏ.பி., உரத்தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரும் அதிருப்திக்குள்ளாகி உள்ளனர். மஞ்சள் சாகுபடிக்கு அடியுரம் முக்கியமானது. மொடக்குறிச்சி, நசியனூர், சித்தார், கோபி பகுதியில் உள்ள கூட்டுறவு வங்கியில் ஒரு மூட்டை கூட இருப்பு இல்லை.கூட்டுறவு வங்கியில் பயிர்க்கடன் வழங்குவது இல்லை. நகையை அடமானமாக வைத்துதான் பயிர்க்கடன் பெற வேண்டியுள்ளது. விவசாயிகளுக்கு உரம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**சொட்டு நீர்ப்பாசனத்துக்கு ரூ.3.85 கோடி தமிழகத்தில் ஈரோடு மாவட்டம் முதலிடம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,02:45 IST

ஈரோடு: தமிழகத்தில் அதிகபட்சமாக ஈரோடு மாவட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனத்துக்கு 1,474 பேருக்கு 3.85 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நிலவி வரும் வறட்சியால் சில ஆண்டுகளாக சொட்டு நீர்ப்பாசனத்துக்கு மாறும் விவசாயிகள் எண்ணிக்கை உயர்கிறது. தமிழகத்திலேயே ஈரோடு மாவட்டத்தில் தான்

அதிகளவில் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. சொட்டு நீர் பாசனம் அமைக்க ஆகும் செலவு, பயிரின் இடைவெளியைப் பொருத்து மாறுபடும். இடைவெளிக்கு ஏற்ப ஒரு ஹெக்டேருக்கு அனுமதிக்கப்பட்ட மானியம் மாறுபடுகிறது. கரும்பு, மஞ்சள், வாழை, மரவள்ளிக்கிழங்கு, காய்கறி பயிர்கள், தென்னை, பூக்கள், கொய்யா, மக்காச்சோளம் ஆகியவற்கை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் சாகுபடி செய்யலாம்.
ஊடுபயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, இடைவெளிக்கேற்ப ஊடுபயிர் அல்லது முக்கிய பயிர் ஆகிய இரண்டில் ஏதாவது ஒன்றுக்கு தோட்டக்கலை துறை சார்பில் 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. சொட்டு நீர்ப்பாசன மானியமாக ஒரு விவசாயிக்கு குடும்பத்துக்கு அதிகபட்சமாக ஐந்து ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படுகிறது.

ஈரோடு மாவட்ட தோட்டக்கலை துறை மூலம் சென்ற நிதியாண்டில் 1,474 பயனாளிக்கு 1,303 ஹெக்டேருக்கு, மூன்று கோடியே 85 லட்சத்து 29 ஆயிரத்து 161 ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 2010-11ல் துல்லியப் பண்ணைத் திட்டம் அமைக்க 360 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக 20 பேர் கொண்ட குழு மூலம் பதிவு செய்து, ஒரு வட்டாரத்துக்கு ஒரு குழு அமைக்கப்படவுள்ளது. அதில் 20 சதவீதம் எஸ்.சி., மற்றும் எஸ்.டி., பிரிவினரும், 80 சதவீதம் பொது பிரிவினரும் தேர்வு செய்யப்படவுள்ளனர்.சென்ற நான்கு ஆண்டுகளில் மாவட்டத்தில் 11.50 கோடி ரூபாய் சொட்டு நீர்ப்பாசன மானியம் வழங்கப்பட்டு, மாநிலத்தின் முதன்மை மாவட்டமாக ஈரோடு மாவட்டம் திகழ்கிறது.

**வெண்டையில் பூச்சி தாக்குதல்; சீஸன் காலத்தில் அறுவடை பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2010,01:50 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் வெண்டைக்காயில் ஏற்பட்டுள்ள பூச்சித் தாக்குதலால் சாகுபடி குறைந்துள்ளது. திருமண சீஸன் காலத்தில் வெண்டை அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரும் கவலையில் உள்ளனர். வெப்ப மண்டலக் காய்கறிப் பயிரான வெண்டைக்காய், மார்ச், மே மற்றும் ஜூன் மாதங்களில் அதிகளவில் பயிரிடப்படும். உணவில் அதிகம் பயன்படுத்தப்படும் வெண்டைக்காயில் வைட்டமின் "ஏ' மற்றும் "சி' சத்துக்கள், புரதம் மற்றும் தாது உப்புகள் அதிகம் உள்ளது. "ரிபோபிளேவின்' எனப்படும், "பி12' வைட்டமின் உள்ளதால். வெண்டைக்காயை சாப்பிடுவர்களுக்கு பசியின்மை, எடை குறைதல், வாய்ப்புண்

ஆகியவை ஏற்படாது. மிகவும் குறைந்த காலம் மற்றும் குறைந்த நீர்வளத்தில் அதிக மகசூலை தரக்கூடிய வெண்டைக்காயை, கோபி வட்டார விவசாயிகள் அதிகளவில் பயிரிடுகின்றனர். சிறுவலூர், கொளப்பலூர், பொலவகாளிப்பாளையம், கடுக்காம்பாளையம், குள்ளம்பாளையம், கள்ளிப்பட்டி, குருமந்தூர், கடத்தூர், கொங்கர்பாளையம் ஆகிய பகுதிகளில் வெண்டைக்காய் சாகுபடி அதிகம். ஜூன் மாதம் சாகுபடி செய்யப்பட்ட வெண்டைக்காய் செடிகளில் வெள்ளை ஈக்கள் மற்றும் வண்டு தாக்குதல் தென்படுகிறது. இதனால், விவசாயிகள் வெண்டைக்காயை குறிப்பிட்ட காலத்துக்குள் அறுவடை செய்யாமல், அடுத்த பருவத்துக்கு தேவைப்படும் என, விதையாக வளர்த்து வருகின்றனர். விவசாயிகள் கூறியதாவது: திருமண சீஸனை மனதில் கொண்டு வெண்டைக்காயை அதிகளவில் பயிரிடுவோம். நடப்பு சீஸனில் பருவமழை தவறியதால் வெண்டை சாகுபடி குறைந்தது. கோபி பகுதியில் தொடர்ந்து 10 நாட்களாக மழை பெய்து வருவதால், வெண்டைக்காய் அதிகளவில் உற்பத்தி இருக்கும் என எதிர்பார்த்தோம். மழை பெய்ததால் மாவுப்பூச்சி தாக்குதல் குறைந்திருந்தது. ஆனால், வேறு வகையான பூச்சி மற்றும் வண்டு தாக்குதலால், வெண்டைக்காய் பிஞ்சிலேயே முற்றி விடுகிறது. 45 நாட்களுக்கு பிறகு முற்றும் வெண்டைக்காய், பூச்சி தாக்குதலால் 20 நாட்களிலேயே சரிவர வளராமல் முற்றி விடுகிறது. இலைகளும் உதிர்ந்து விட்டன. பூச்சிக் கொல்லி மருந்துகள் அடித்தும் பயனில்லை. சராசரியாக ஒரு ஏக்கருக்கு 10 முதல் 15 டன் வரை வெண்டைக்காய் மகசூல் கிடைக்கும். பூச்சி தாக்குதலால் ஐந்து முதல் எட்டு டன் வரை கூட மகசூல் கிடைப்பது கடினம்தான். சரிவர வளராத நிலையில் முற்றிவிட்ட வெண்டைக்காயை சமையலுக்கு பயன்படுத்த முடியாது. இதனால், விதைக்காக செடியில் விடுவதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**மானிய விலையில் கோதுமை, அரிசி: மத்திய நிதியமைச்சர் கோவையில் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2010,00:54 IST

கோவை: ""அனைவருக்கும் கல்வி, உணவு, வேலை அளிக்கும் சட்டத்தையும், மானிய விலையில் கோதுமை மற்றும் அரிசி வழங் கும் சட்டத்தை விரைவில் லோக்சபாவில் நிறைவேற்ற இருக்கிறோம்,'' என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கோவை பொதுக்கூட்டத்தில் பேசினார்.

காங்கிரஸ் கட்சியின் 125 வது ஆண்டு விழா, முன்னாள் மத்திய நிதியமைச்சர் சி.சுப்ரமணியம் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி கோவை சிறைச்சாலை மைதானத்தில் காங்கிரஸ் கட்சி பொதுக் கூட்டம் நடந்தது. இதில் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி பேசியதாவது:

சி.சுப்ரமணியம் தேசபக்தர், அறிஞர், பொருளாதார நிபுணர், விவசாய அறிஞர், இந்தியாவை கட்டி உருவாக்கும் பணியையும் செய்தார். தேசத்தின் மகத்தான தலைவருக்கு வணக்கம் சொல்வதில் பெருமை கொள்கிறேன். காங்., கட்சியிலுள்ளவர்கள் அதிகாரத்தில் இருக்கிறோமா இல்லையா என்பது பிரச்னை இல்லை. காங்கிரசிற்காக, நாட்டிற்காக உழைக்கிறோம் என்பது தான் முக்கியம்.

அனைவருக்கும் கல்வி, உணவு, வேலை அளிக்கும் சட்டத்தையும், மானிய விலையில் கோதுமை மற்றும் அரிசி வழங் கும் சட்டத்தை விரைவில் லோக்சபாவில் நிறைவேற்ற இருக்கிறோம். தற்போது ஒத்த கொள்கைகளை கொண்டுள்ள தோழமை கட்சிகளோடு இணைந்து ஆட்சி நடத்துகிறோம். நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9 சதவீதம், 12 சதவீதம் வரிவருவாய் உயர்ந்துள்ளது. 4 கோடி இந்திய விவசாயிகளுக்கு 70 ஆயிரம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்துள்ளோம். லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, கல்விக்கடன் வழங்கியுள்ளோம். உலக அளவில் இந்தியாவின் நிலையை அடுத்த நிலைக்கு முன்னுக்கு கொண்டுசென்றுள்ளோம். கடந்த 40 ஆண்டுகளில் தமிழகத்தில் காங்.,கட்சி ஆட்சியில் அமரவில்லை. விரைவில் ஆட்சியில் அமருவதற்கான முயற்சியில் தொண்டர்கள் இறங்க வேண்டும். இவ்வாறு, பிரணாப் பேசினார்.

**விளைநிலத்துக்கு பாசன நீர் விவசாயிகளுக்கு எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,02:11 IST

மடத்துக்குளம்: மடத்துக்குளம் அருகே 220 ஏக்கர் விளைநிலத்துக்கு பாசன நீர் செல்வது குறித்த பிரச்னையில், தாசில்தார் ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். மடத்துக்குளம் அருகே உள்ள மலையாண்டிபட்டணம் புதிய ஆயக்கட்டு 22/6 மடைப்பகுதியில் 340 ஏக்கர் விளைநிலங்கள் உள்ளன. அமராவதி கால்வாய் மடைப்பகுதியில் இருந்து இரண்டு கி.மீ., நீள கிளை வாய்க்கால் வழியாக விளை நிலங்களுக்கு பாசன நீர் சென்றுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக இடையில் உள்ள சில விவசாயிகள், கிளைவாய்க் காலில் பல இடத்தில் தடுப்பணை ஏற்படுத்தி பாசனநீரை தடுத்துள்ளதோடு, முறை கேடாக பல வெட்டு மடைகள் அமைத்து, தங்களது விளைநிலங்களுக்கு மட்டும் பயன்படுத்தி வந்துள்ளனர். பாசன நீர் இடையே தடுக்கப்பட்டு பல இடங்களில் கிளை வாய்க்கால் மூடப்பட்டதால், 220 ஏக்கர் விளை நிலங்கள் பல ஆண்டுகளாக காய்ந்து கிடக்கின்றன. பாதிக்கப்பட்ட விவசாயிகள், பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கும், கலெக்டருக்கும் புகார் மனுக்கள் கொடுத்தனர். மடத்துக்குளம் தாசில்தார் லியாகத் அலி நேரில் ஆய்வு செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார். அதில், "பல இடங்களில் நீர்

தேக்கி வைக்கப்பட்டுள்ளதுடன், பாசன நீர் வீணடிக்கப்பட்டு வருகிறது. மேல்மடை விவசாயிகள் கடை மடை விவசாயிகளுக்கு பாசன நீரை தடைசெய்வது சட்டப்படி குற்றம். இதற்கு தமிழ்நாடு அரணி வாய்க்கால் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடை மடை பாசனத்துக்கு நீர் வழங்க வேண்டும். இடையே, பாசன நீரை தடுக்கும் விவசாயிகளின் நிலங்களை அமராவதி ஆயக்கட்டு திட்டத்தில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்,' என்று எச்சரித்துள்ளார்.

**அறுவடை துவங்கியதும் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதிக்கக் கூடாது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2010,22:48 IST

திருப்பூர்; "இந்தியாவில் அறுவடையாகும் தரமான பருத்தியை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கக் கூடாது என மும்பையில் நடந்த தேசிய பருத்தி ஆலோசனைக்குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக' ஆலோசனைக்குழு உறுப்பினர் ராஜாசண்முகம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் விளையும் பருத்தி பயன்பாடு குறித்து தேசிய பருத்தி ஆலோசனைக்குழு அரசுக்கு பரிந்துரைக்கிறது. அதற்காக, பருத்தி ஆண்டில் (அக்.,-செப்.,) மொத்த விளைச்சல், உள்நாட்டு தேவை, இறக்குமதி, ஏற்றுமதி உள்ளிட்ட விவரங்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடத்தப்படுகிறது. வரும் அக்., மாதத்தில் இருந்து, 2010-11 பருத்தி ஆண்டு துவங்குவதால், அதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் மும்பையில் நடந்தது. பருத்தி ஏற்றுமதி அளவுக்கு மிஞ்சியது; நூல் விலை உயர்வு ஜவுளித்தொழிலையே புரட்டிப்போட்டது. இனியும், பழைய பாதிப்புகளுக்கு அனுமதிக்கக் கூடாது; ஆலோசனைக் கூட்டத்தில் முக்கிய முடிவுகளுக்கு பரிந்துரைக்க வேண்டும் என ஜவுளி உற்பத்தியாளர்கள் எதிர்பார்த்தனர்.

இதுகுறித்து தேசிய பருத்தி ஆலோசனைக்குழு உறுப்பினர் ராஜாசண்முகம் கூறியதாவது: கடந்த சில ஆண்டுகளின் புள்ளி விவரப்படி, வரும் பருத்தி ஆண்டிற்கான விவரங்கள் இறுதிசெய்யப்பட்டுள்ளன. அதன்படி, கடந்த ஆண்டு பருத்தி இருப்பு 40.50 லட்சம் பேல்; அறுவடையாகும் பருத்தி 325 லட்சம் பேல்; இறக்குமதியாகும் பருத்தி ஐந்து லட்சம் பேல் என, 370.50 லட்சம் பேல் பருத்தி கணக்கிடப்பட்டுள்ளது. மருத்துவம் பயன்பாட்டிற்கான "நான்-மில்' தேவைகளுக்கு 20 லட்சம் பேல்; உள்நாட்டு ஜவுளி உற்பத்திக்கு 246 லட்சம் பேல் என, 266 லட்சம் பேல் பருத்தி பயன்பாட்டிற்கு தேவை. மீதியுள்ள 104.50 லட்சம் பேலில், 55 லட்சம் பேல் பருத்தியை நிலையான இருப்பாக வைக்க வேண்டும் என, ஆலோசனைக்குழு பரிந்துரைத்தது.

மத்திய அரசு உடனடியாக ஏற்றுக்கொண்டது. மீதியுள்ள 49.50 லட்சம் லட்சம் பருத்தியை வேண்டுமானால் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கலாம். அதுவும், 2011 ஜன., மாதத்திற்கு பிறகுதான் அனுமதிக்க வேண்டும் என, வலியுறுத்தப்பட்டது. பருத்தி அறுவடை துவங்கியதும், பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கக் கூடாது.

முக்கிய போட்டி நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளில் பருத்தி விளைச்சல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்திய பருத்தியை மட்டுமே அந்நாடுகள் ஆதாரமாக கொண்டுள்ளன. அறுவடை துவங்குவதற்கு முன்னதாக ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கினால், முதல் தரமான பருத்திகள் அனைத்தும் ஏற்றுமதியாகிவிடும். உள்நாட்டு தேவைகளுக்கு தரமான பருத்தி கிடைக்காது. இதனால், வழிதெரியாமல் விழித்துக்கொண்டிருக்கும் போட்டி நாடுகளுக்கு தேவையான பருத்தியை வழங்கி, நமக்கு நாமே போட்டியை வலுப்படுத்துவது போல் ஆகிவிடும். எனவே, துவக்கத்திலேயே பருத்தி ஏற்றுமதி செய்ய அனுமதிக்க கூடாது.

தற்போதைய புள்ளிவிவரப்படி, 49.50 லட்சம் பேல் பருத்தி கூடுதல் இருப்பாக இருக்க வாய்ப்புள்ளதால், பருத்தி ஏற்றுமதியை மூன்று மாதங்களுக்கு பிறகுதான் அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. பருத்தி ஆலோசனைக்குழுவின் பரிந்துரைகள் மீது, மத்திய அரசின் உயர்மட்டக்குழு வரும் 3ம் தேதி விவாதிக்கிறது. உயர்மட்டக்குழுவின் முடிவே, இறுதி அறிவிப்பாகவும் வெளியாக வாய்ப்புள்ளதால், பின்னலாடை தொழில்நலன் கருதி பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கும்போது, பல்வேறு தரப்பினரின் ஆலோசனைகளை பெறவேண்டும் என வலியுறுத்தியுள்ளோம். இவ்வாறு, ராஜாசண்முகம் தெரிவித்தார்.

**விவசாயிக்கு மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2010,00:45 IST

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூர் யூனியன் அலுவலக வளாகத்தில் மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி 50 விவசாயிகளுக்கு வேளாண் துறையினரால் அளிக்கப்பட்டது.
மண்ணச்சநல்லூர் வேளாண் உதவி இயக்குனர் (பொ) ரெங்கராஜன் தலைமை வகித்தார்.
பயிற்சியில் மண்புழு உரத்தின் நன்மைகள், பயன்படுத்தும் முறை, இயற்கை விவசாயத்தின் நன்மைகள், குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. விதைச்சான்று அலுவலர் மணிவண்ணன், துணை வேளாண் அலுவலர் மனோகரன் பேசினர். உதவி அலுவலர்கள் லட்சுமணன், மனோகர்,

பாஸ்கர் ஏற்பாடுகளை செய்தனர். உதவி அலுவலர் ஜீவானந்தம் வரவேற்றார். துரைசங்கர் நன்றி கூறினார்.

**பணம் கொட்டும் "ஜமுனாபாரி' ஆடு வளர்ப்பு;ஆட்டின் விலை ரூ.50 ஆயிரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2010,22:54 IST



பாலமேடு: பணம் கொட்டும் "ஜமுனாபாரி' ஆடு வளர்ப்பில் மதுரை விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். 80 கிலோ எடையுள்ள ஆட்டின் அதிகபட்ச விலை 50 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. பாகிஸ்தானை பூர்வீகமாக கொண்ட ஜமுனாபாரி ஆட்டின் காதின் நீளம் ஒரு அடி; 10 இஞ்ச் அகலம். அழகான தோற்றம் கொண்டது. ஆண், ஆடுகள் ஐந்தடி உயரமும், பெண், ஆடுகள் நான்கடி உயரமும் சராசரியாக வளரக்கூடியது. வளர்ந்த ஆட்டின் எடை 80 கிலோ இருக்கும். ஆட்டின் கறி, மிருதுவாகவும், அதிக சுவையுடன் இருப்பதால் மாமிச பிரியர்களுக்கு ஜமுனாபாரி வரப்பிரசாதகமாக கருதப்படுகிறது. ஜமுனா பிரியாணி: முன்னணி அசைவ உணவகங்களில் வான்கோழி பிரியாணிக்கு தனி மவுசு உண்டு. இவ்வரிசையில் ஜமுனாபாரியும் இடம் பிடித்துள்ளது. முன்னணி அசைவ உணவகங்களில் ஜமுனாபாரி மாமிச வகைகளும் இடம் பெறுகிறது. ஒரு கிலோ தனிக்கறி 500 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கறியை விலைக்கு வாங்குவதை விட ஆட்டுக்குட்டிகளை விவசாயிகளிடம் கொடுத்து வளர்ப்போருக்கு அதிக லாபம் கிடைக்கிறது. மதுரையில் அலங்காநல்லூர், பாலமேடு பகுதியில் ஜமுனாபாரி ஆடு வளர்ப்பில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஏற்றுமதிக்கு உகந்தது:ஜப்பான், சிங்கப்பூர்,

மலேசியா, ஹாங்காங், தைவான் மற்றும் அரேபிய நாடுகளுக்கு பதப்படுத்தப்பட்ட ஜமுனா ஆட்டுக்கறி ஏற்றுமதி செய்யப்படுகிறது. மதுரையில் வளர்க்கப்படும் ஆடுகள், சென்னை சைதாப்பேட்டைக்கு கொண்டு செல்லப்படுகிறது. அங்கு ஆட்டின் கறியை பதப்படுத்தி "டின்'களில் அடைத்து ஏற்றுமதி செய்கின்றனர். பண்டிகை காலங்களில் கறியும், பாலும் முக்கிய பங்கு வகிக்கிறது. பாலில் அதிக புரதச்சத்து இருப்பதால் குழந்தைகளுக்கு நன்கு காய்ச்சிய பாலை கொடுத்து வந்தால், குழந்தை ஆரோக்கியமாகவும், நோய் எதிர்ப்பு சக்தி மிக்கதாகவும் வளரும் என விவசாயிகள் கூறுகின்றனர். ஈத்துக்கு மூன்று குட்டி: பாலமேட்டை சேர்ந்த ஜமுனாபாரி பண்ணை மேலாளர் பட்டுராஜன், ஆடு வளர்க்கும் ராஜேந்திரன் (45) கூறும்போது, ""ஜமுனாபாரி ஆடுகள் ராஜஸ்தானில் அதிகளவு வளர்கிறது. அதிக உஷ்ணத்தை தாங்கும் திறன் கொண்டது. இதனால், இதில் நோய் எதிர்ப்பு அதிகம். கறியும், பாலும் வாரம் தோறும் சாப்பிட்டு வந்தால் உடல் சூட்டை குறைத்து ஆரோக்கியத்தை வளர்க்கும். ஒரு ஈத்துக்கு மூன்று குட்டிகள் வரை ஈனும். 25 நாள் குட்டி ஒன்றின் விலை 6,000 ரூபாய். கருவுற்ற ஆட்டின் விலை 20 ஆயிரம் ரூபாய். பாசிப்பயறு, துவரை, உளுந்து தூசி மற்றும் கடலை புண்ணாக்கு உணவாக வைக்கப்படுகிறது. வியாபார நோக்கமின்றி சொந்த உபயோகத்துக்காக வளர்க்கிறோம்,'' என்றனர். விவரங்களுக்கு பட்டுராஜன் மொபைலில் (97866 90370) தொடர்பு கொள்ளலாம்.

**மானியம் வழங்கியும் கடன் கிடைக்காமல் விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2010,22:40 IST

தேனி: தோட்டக்கலைத்துறையில் வழங்கப்படும் அரசு மானியம், கடன் கிடைக்காமல் சாகுபடி செய்த விவசாயிகள் ஒன்பது மாதங்களாக தவித்து வருகின்றனர். தோட்டக்கலைத்துறையில் தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் அமைக்க 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் ஒவ்வொரு விவசாயிக்கும் மானியமாக 48 ஆயிரத்து 640 ரூபாயும், வங்கி கடனாக 37 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். டிசம்பரில் பெரியகுளம் பகுதியில் 58 விவசாயிகள் இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கு வழங்க வேண்டிய 26 லட்சம் ரூபாய் மானியத்தை தோட்டக்கலைத் துறை ஸ்டேட் வங்கிக்கு வழங்கி விட்டது. பெரியகுளம் ஸ்டேட் வங்கி, இந்த மானியத்துடன் 28 லட்சம் ரூபாய் கடன் சேர்த்து விவசாயிகளுக்கு வழங்க வேண் டும். இதற்கான அனைத்து ஆவணங்களும் சமர்பித்தும் ஒன்பது மாதங்களாக விவசாயிகளுக்கு கடன் வழங்கவில்லை. இதனை நம்பி சாகுபடி செய்த விவசாயிகள் தங்களது சாகுபடியினை முடித்தும் விட்டனர். இது பற்றி ஸ்டேட் வங்கி மேனேஜர் செல்லத்துரை

கூறுகையில், "தேர்வு செய்யப்பட்ட 58 விவசாயிகளுக்கும் செப்டம்பருக்குள் கடன் வழங்கப்படும்' என்றார்.

**மிளகாய் விவசாயிகள் கண்ணீர் : இழப்பீடு இன்றி தவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2010,21:50 IST

சிவகங்கை : மாவட்டத்தில், கடந்த பருவங்களில் மிளகாய் விவசாயம் எதிர்பார்த்த பலனை கொடுக்கவில்லை. விளைச்சல் பொய்த்த நிலையில், காப்பீடு செய்த பயிருக்கான இழப்பீடும் கிடைக்காமல், விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.
சிவகங்கை, இளையான்குடி, காளையார்கோவில், எஸ்.புதூர், மானாமதுரை ஒன்றியங்களில் சராசரியாக 3,000 ஏக்கரில் மிளகாய் பயிரிடுகின்றனர். சம்பா, குண்டு மிளகாய் உற்பத்தி அதிகளவில் இருக்கும். கடந்த 2008-09 ல் மிளகாய் நடவு செய்த விவசாயிகள், மழை, வறட்சி, பூச்சி தாக்குதல் போன்றவற்றில் இழப்பீடு பெற காப்பீடு செய்திருந்தனர்.
1,000 ஏக்கர் பயிருக்கு, இந்திய வேளாண் காப்பீடு நிறுவனத்தில் பிரீமியம் செலுத்தப்பட்டது. இழப்பீடாக ஏக்கருக்கு அதிகபட்சம் 10 முதல் 12 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும். மத்திய அரசு 85 சதவீதம், மாநில அரசு 15 சதவீதம் என்ற அடிப்படையில், இத்தொகை வழங்கப்படும்.
**இழுபறி:** இப்பருவத்தில் வறட்சி, பூச்சி தாக்குதல், காலம் தவறிய மழையால் மிளகாய் விவசாயம் பாதிக்கப்பட்டது. விவசாயிகளின் கோரிக் கையை ஏற்று, பாதிப்பு குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதனால் இழப்பீடு கிடைக்கும் என்ற நம்பிக்கை, விவசாயிகளுக்கு துளிர் விட்டது. ஆனால் பல மாதம் கடந்தும், இழப்பீடு கிடைக் காமல் விரக்தி அடைந்துள் ளனர்.
இதுகுறித்து அதிகாரிகளிடம் முறையிட்ட போது, "இழப்பீடுக்கான நிதி ஒதுக்கப்படவில்லை. நிதி கிடைத்தவுடன் வழங்கப்படும்' என விளக்கம் அளித்துள்ளனர்.
கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) தட்சிணாமூர்த்தி கூறுகையில், ""காப்பீடு செய்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க, அரசின் பங்களிப்பு தொகையை எதிர்பார்த்துள்ளோம். மத்திய, மாநில அரசுகளின் நிதித்துறை ஒப்புதல் கிடைத்து விட்டது. விரைவில் இழப்பீடு வழங்கப்படும்," என்றார்.


**நீர்வள நிலவளத்திட்டத்தில் மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,03:13 IST

தூத்துக்குடி:கோவில்பட்டி, புதூர் மற்றும் விளாத்திகுளம் வட்டாரங்களில் நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் வைப்பாறு உபவடிநிலப்பகுதிகளில் நடப்பு ஆண்டில் (2010-2011) சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்புநீர் பாசனம் அமைப்பதற்கு 65 சதவீத மானியம்

வழங்கப்படும் என வேளாண்மைப் பொறியியல் துறை தூத்துக்குடி செயற்பொறியாளர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பில் 50 முதல் 70 சதவீதம் வரை பாசன நீர் சேமிக்கப்படுகிறது. சேமித்த நீரைக் கொண்டு சாகுபடி பரப்பை அதிகரிக்கலாம். இந்த முறையில் நீர்ப்பாசனம் நேரம், ஆட்களின் தேவை குறைவாகும். மேலும் களைகள் முளைப்பது கட்டுப்படுத்தப்படுகிறது. உரங்கள் மற்றும் மருந்துகள் ஆகியவற்றை பாசன நீரில் கலந்து நேரடியாக அளிக்க முடிகிறது. சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க அரசு மானியம் மட்டுமல்லாது பாங்க் கடன் உதவியும் வழங்குகிறது. மேலும் பாசனப் பகுதிகளில் மழைநீரை சேமிக்கும் பொருட்டு பண்ணை குட்டைகள் அமைக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பண்ணைக் குட்டைகளில் சேமிக்கப்படும் மழை நீரினை கண்மாய்களில் நீர் இருப்பு இல்லாத போது பாசனத்திற்கு பயன்படுத்தலாம். மேலும் கால்நடைகளின் தண்ணீர் தேவையினை இதன்மூலம் பூர்த்தி செய்யலாம். பண்ணைக்குட்டை அமைப்பதற்கு 90 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை 58, எட்டயபுரம் சாலை, கோவில்பட்டி அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ***சர்வதேச தானிய கவுன்சில் மதிப்பீடு உலகின் கோதுமை பயன்பாடு 65.70 கோடி டன்னாக உயரும்***



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் உலக அளவில் கோதுமை பயன்பாடு 65.70 கோடி டன்னாக இருக்கும் என சர்வதேச தானிய கவுன்சில் மதிப்பீடு செய்துள்ளது. இது, சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தைக் காட்டிலும் 20 லட்சம் டன் அதிகமாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவில் வறட்சி

நடப்பு பருவத்தில் உலகின் கோதுமை உற்பத்தி குறித்தும் இக்கவுன்சில் மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது. இதன்படி, இப்பருவத்தில் சர்வதேச அளவில் இதன் உற்பத்தி 64.40 கோடி டன்னாக இருக்கும். எனினும் முந்தைய மதிப்பீட்டைக் காட்டிலும் இது 70 லட்சம் டன் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. கோதுமை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் ரஷ்யாவில் வறட்சி ஏற்பட்டுள்ளதால், அந்நாட்டில் கோதுமை மகசூல் 25 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இது உலகின் ஒட்டுமொத்த கோதுமை உற்பத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆக, நடப்பு பருவத்தில் உற்பத்தியைக் காட்டிலும் பயன்பாடு அதிகமாக இருக்கும் என தற்போதைய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. எனினும் இது குறித்து அதிருப்தி அடைய வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் உலகம் முழுவதுமாக பல நாடுகளில் கோதுமை கையிருப்பு போதிய அளவு உள்ளது. எனவே சர்வதேச சந்தையில் கோதுமை அளிப்பு குறைய வாய்ப்பில்லை.

இந்தியாவுக்கு சாதகம்

ரஷ்யாவில் வறட்சி ஏற்பட்டுள்ளதால், அந்நாடு உள்நாட்டு தேவையைக் கருத்தில் கொண்டு கோதுமை ஏற்றுமதிக்கு இம்மாதம் 5–ந் தேதியன்று தற்காலிகமாக தடை விதித்துள்ளது. அங்கு, கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கோதுமை விலை அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

உலகின் கோதுமை உற்பத்தி குறித்த தற்போதைய சூழ்நிலை இந்தியாவிற்கு சாதகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. நம் நாட்டில் தொடர்ந்து இரண்டு பருவங்களில் அமோக விளைச்சல் காரணமாக கோதுமை கையிருப்பு 1.60 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. எனினும், உணவுப் பணவீக்கம் அதிகரித்துள்ளதாலும், நடப்பு கரீஃப் பருவ (ஜூன்–அக்டோபர்) உற்பத்தி குறித்த ஐயங்களாலும் மத்திய அரசு குறுகிய கால அடிப்படையில் கோதுமை ஏற்றுமதி மீதான தடையை நீட்டிக்கவே விரும்புகிறது.

கரீப் பருவம்

அடுத்த மாதத்தில், கரீஃப் பருவ உணவு தானியங்கள் உற்பத்தி குறித்த மதிப்பீடுகள் வெளிவர உள்ளன. அப்போதுதான் கோதுமை ஏற்றுமதி மீதான தடையை நீக்குவது குறித்து முடிவு எடுக்க இயலும் என அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆகஸ்டு மாதம் 27–ந் தேதி நிலவரப்படி, இந்தியாவில் முக்கிய தானியங்கள் பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு 9.50 கோடி ஹெக்டேராக உள்ளது. இதில் நெல் பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு மட்டும் சுமார் 3.13 கோடி ஹெக்டேராகும். சென்ற ஆண்டு கரீஃப் பருவத்துடன் ஒப்பிடும்போது தற்போது சாகுபடி பரப்பளவு குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது என்றாலும், இதை வைத்து தானியங்கள் உற்பத்தி அமோகமாக இருக்கும் என உறுதிபட கூற இயலாது என சர்வதேச தானிய கவுன்சில் தெரிவித்துள்ளது.



மஞ்சூர் அருகே கொல்லிமலை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள பீட்ரூட் பயிருக்கு உரமிடும் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயி.

## மஞ்சூர் பகுதியில்

# உரமிடும் பணியில் விவசாயிகள் தீவிரம்

மஞ்சூர், ஆக.30–

மஞ்சூர் பகுதியில் அதிக மகசூல் வேண்டி பீட்ரூட் பயிர்களுக்கு உரமிடும் பணியில் அப்பகுதி விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

### காய்கறிகள்

மஞ்சூர் அருகே உள்ள அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட கொல்லிமலை, ஓரநள்ளி, சேமந்தாடா ஆகிய பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் காய்கறிகள் அதிகளவில் பயிரிட்டு வருகிறார்கள். தற்சமயம் இந்த பகுதியில் உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், முட்டைகோஸ், நூல்கோல், வெள்ளை பூண்டு, கிளைகோஸ் உள்ளிட்ட காய்கறிகளை அதிகளவில் விளைவித்து வருகிறார்கள்.

இந்த பகுதியில் பீட்ரூட் பயிரிடப்பட்டு சுமார் 40 நாட்கள் ஆகி உள்ளதால் பீட்ரூட் நாற்றுக்கள் இடையே உரமிடும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகிறார்கள். இதே போன்று இன்னும் 2 தடவை உரமிட்டால் சுமார் 50 நாட்களில் பீட்ரூட் அறுவடைக்கு தயாராகி விடும்.

### அதிக செலவு

இது குறித்து விவசாயி பாபு கூறியதாவது:–

தற்சமயம் பெரும்பாலான விவசாயிகள் ஆடிபோகம் மற்றும் கடைபோகத்தில் தங்களது காய்கறி தோட்டங்களில் உருளைக்கிழங்கு, கேரட் போன்றகாய்கறிகளை அதிகளவில் பயிரிட்டுள்ளனர்.

உருளைக்கிழங்கு பயிரிட முதலீடு செலவு அதிகமாக உள்ளது. மேலும் ஆட்கள் பற்றாக் குறை காரணத்தால் உருளைக்கிழங்கு பயிரிட நாட்கள் அதிகரிப்பதுடன் அதிக தொகை செலவிட வேண்டியது உள்ளதால் எனது தோட்டத்தில் பீட்ரூட் பயிரிட்டு உள்ளேன்.

### உரம்

குறைந்த செலவில் பீட்ரூட் பயிரிடலாம். மேலும் அதிக வருமானம் ஈட்ட முடியும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் பீட்ரூட் பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த பகுதியில் பயிரிடப்பட்டுள்ள பீட்ரூட் இன்னும் சுமார் 50 நாட்களில் அறுவடை செய்துவிடலாம். நல்ல மகசூல் கிடைப்பதற்காக தற்போது உரமிடும் பணியில் இப்பகுதி விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர்.

இவ்வாறு விவசாயி கூறினார்.